உ

சிவமயம்

ஓம்



# "ஆன்மிக ஜோதி"

## நினைவு மலர்

அமரர்

திரு. வைத்திலிங்கம் அம்பலவாணர்

**IN MEMORY OF**

**LATE. MR. VAITHILIGAM AMPALAVANAR**


**24-09-2006**

# சமர்ப்பணம்

எமது அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களுக்கு இந்நூல்
சமர்ப்பணம்
எங்களை விட்டுப் பிரிந்த போதும்
எங்கள் உள்ளத்தில் தெய்வமாகி
என்றும் உறைந்திருக்கும், பண்புடனும்
பாசத்துடனும் தேசத்துடனும் வாழ்வாங்கு
வாழ்ந்து எந்நேரமும் "வதிரன் புலோவானே
வதிரன்புலோவானே" என்று வாயார துதிபாடி
இன்று வானுறையில் தெய்வமாகிவிட்ட
எமது அன்பு தெய்வத்திற்கு
இம்மலரை காணிக்கையாக்குகின்றோம்.

மனைவி,
பெறாமக்கள்.

உ



மண்ணுலகை வாழ்வில்: 08-05-1921

வானுறையும் தெய்வமாய்: 25-08-2006

அமரர்

# திரு. வைத்திலிங்கம் அம்பலவாணர்

அவர்கள்

திதி - வளர்பிறை துதியை

## "ஆன்மிக ஜோதி"
## அமரர். திரு. வைத்திலிங்கம் அம்பலவாணர் அவர்களின் வாழ்க்கை வரலாறு

உலகில் எத்தனையோ பேர் பிறக்கின்றார்கள். சிலகாலம் வாழ்ந்து பின்னர் மறைந்து விடுகின்றனர். மறைந்தும் மறையாத, எம் மனதில் அழியாத தனி இடத்தை நிரந்தரமாகப் பெற்று, அணையா மணி விளக்காய் நிர்வாக சரித்திரத்தில் இடம்பெற்று பிரகாசிப்போர் அரிதிலும் அரிதே! அங்ஙனம் அமரத்துவம் எய்திய உத்தமரே திரு. வை. அம்பலவாணர் அவர்கள் ஆவார். அத்தகுதி ஒரு சிலருக்கே உண்டு. அத்தகுதிக்குப் பூரணவடிவம் கொடுத்தவர் எங்கள் பெரியார் திரு. அம்பலவாணர் ஆவார்.

அன்னார் ஈழவளநாட்டில் செந்தமிழ் நடைபயில, எழிலுறும் வடபால் சிரமென மிளிரும் யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமியில், நீர் வளமும், நில வளமும், சீர் செறிந்து விளங்கும் வலிகாமம் மேற்குப் பகுதியில் மூளாய் என்னும் தெய்வீக பூமியில் தெற்கு அராலி பிரபு விஜயேந்திர முதலியார் வமிச அருணாசலம் வைத்திலிங்கத்திற்கும் சுழிபுரம் சேதுகாவல முதலி வமிச நாகநாதர் பெண் வள்ளியம்மைக்கு மூத்த மகனாக 08.05.1921ம் ஆண்டு திரு. வை. அம்பலவாணர் பிறந்தார். இவரின் சகோதரியாக தெய்வானைப்பிள்ளை அவதரித்தார்.

"வளரும் பயிரை முளையிலே தெரியும்" என்ற முதுமொழிக்கேற்ப சிறு வயதிலேயே அறிவும், நல்ல பண்பும், எந்த வேலையையும் சிரத்தையாகவும், நேர்மையாகவும், முழுமுயற்சியுடனும் செய்யும் தன்மை படைத்தவராக வாழ்ந்து வந்தார்.

அமரர் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்றார். பின்னர் விக்டோறியாக் கல்லூரியில் தனது இடைநிலைக்கல்வியைக் கற்றார். கல்வியில் மட்டும் அல்லாது ஆன்மிகத் துறையிலும் மிகுந்த ஆர்வம் காட்டி ஈடுபாடு கொண்டிருந்தார். ஆன்மிகத் துறையில் சிறுவயது முதல் ஆர்வம் காட்டும் இவரின் தந்தையாரின் வழிநடத்தலே காரணமாய் அமைந்தது. இவரின் தந்தையார் அனுதினமும் கணபதிக்-கன்பு பூண்டு காலை, மாலை ஆலய தரிசனமும் அந்தணர், குரு, பெரியோருக்கு அருந்தொண்டும், ஆதரவும் தினம்தினம் நல்கி, கடவுள் கருணைபெற்ற கண்ணியம் மிக்கவர். மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர்பால் அளவு கடந்த பக்தியுள்ளவர். இவர் அனுதினமும் தொடர்பும், தொண்டின் காரணத்தினால் இவரை யாவரும் "பிள்ளையார்" என்னும் சிறப்புப் பெயர் கொண்டு அழைப்பர். தந்தையின் ஆன்மிக வழிவந்த திரு. அம்பலவாணர் சிறுவயது முதல் இறக்கும்-வரை எந்நேரமும் "**வதிரன்புலோவானே, வதிரன்புலோவானே**" என சித்திவிநாயகரின் நாமத்தை உச்சரித்தபடியே இருந்த ஓர் அரிய ஆன்மீகப் பெரியார் ஆவார்.

தனது இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்து, 1941ம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழக 'மற்றிக்கிலேசன்' பரீட்சையில் 2ம் டிவிஷனில் விஞ்ஞான பாடநெறியிற் தேர்ச்சி பெற்றார்.

பள்ளிப்படிப்பை முடித்த பெரியார், 01.09.1942ம் திகதி இலங்கை எழுதுவினைஞர் பரீட்சையில் தேர்வு செய்யப்பட்டு பொது வேலைத்திணைக்களம், கணக்காய்வுத் திணைக்களம், கைத்தொழில் திணைக்களம், கட்டிட நிர்மாண வேலைத் திணைக்களம், அம்பாறைக் கச்சேரி, யாழ்ப்பாணக் கச்சேரி, பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சு ஆகிய பல்வேறு அரச கரும நிர்வாக அலகுகளில் பல்வேறு பதவிகளில் கடமையாற்றினார். இவர் யாழ்ப்பாணக் கச்சேரியில் கடமையாற்றியபோது அங்கு "காரியாலய நிர்வாக உதவியாளர்" Office Assistant என்ற பதவியில் இருந்தார். அக்காலம் முதல் அவர் "O.A அம்பலவாணர்" சிறியோர் முதல் பெரியோர்வரை அழைக்கப்பட்டார். இன்றும் "O.A" என்றால் அம்பலவாணர் என்று அறியாதவர் இல்லை.

இப்பெரியார் 1947ம் ஆண்டு புரட்டாதி மாதம் 8ம் திகதி சுழிபுரம் சேதுகாவல் முதலி வழிவந்த செல்லையாபிள்ளை செல்லம்மை ஆகியோரின் அன்புமகள் "அன்னலக்சுமி" என்னும் நல்மங்கையைத் திருமணம் செய்தார்.

1967ம் ஆண்டு திரு. அம்பலவாணர் அவர்கள் பதில் உதவிக் கட்டுப்பாட்டாளர் ஏற்றுமதி இறக்குமதி திணைக்களத்தில் நியமிக்கப்பட்டார். 01.01.1972ம் ஆண்டு எழுதுவினைஞர் சேவையில் "அதி சிறப்புத் தரத்தில்" (Supra Grade) பதவி உயர்வு பெற்றார். 25.03.1972ம் திகதி இவர் யாழ்மாவட்டப் பிஸ்கால் பிரதி பணிப்பாளராகவும், சுங்க, நில அளவை உதவி கலக்டராகவும், உதவி பிரதம பரிபாலகராகவும், யாழ் மாவட்ட சிறைச்சாலை மேலதிக உதவி அத்தியட்சகராகவும் பல பதவிகளில் நியமனம் பெற்றார். பின்னர் பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சுக்கு மாற்றம் கொடுக்கப்பட்டு 07.05.1976ம் திகதி தனது 55ம் வயதில் ஓய்வு பெற்றார்.

ரகுராம் என்ற ஆண்மகனையும், ரூபிகா என்ற பெண்மகளையும் பெருமக்களாகப் பேறுபெற்று அவர்களின் நல்வாழ்க்கைக்கு பெரிதும் பாடுபட்டு அவர்களை வழிநடத்தினார்.

மூளாயில் நெற்றிக்கண்போல் விளங்கும் மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகரில் பேரன்பு பூண்டு, அதன் வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டவர். ஆண்டவனிடம் கொண்ட பேரன்பு காரணமாய் தனக்கு உரித்தான 10 பரப்பு 'பிட்டி' என்று சொல்லப்படும் வயல் காணியை மனமுவந்து சித்திவிநாயகருக்கு நன்கொடை கொடுத்த பெருவள்ளல் தம்பதிகள் அம்பலவாணர் - அன்னலட்சுமி ஆவார்.

இவ்வாலயத்திற்கு ஓர் பரிபாலனசபை வேண்டும் என்று பாடுபட்டு உருவாக்க முயற்சி செய்து, வெற்றி கண்டவருள் இவரும் ஒருவராவார். பின்னர் அச்சபையில் பல காலம் இருந்து சேவையாற்றினார்.

மூளாய் மக்களின் பொருளாதார மேம்பாடு கருதி இயங்கிவரும் "மூளாய் கிழக்கு ஐக்கிய நாணய சங்கத்தின்" தலைவராக பல காலம் சேவையாற்றி, அச்சங்கம் தனித்துவமாகச் செயற்பட காணி வாங்க, கட்டிடம் அமைக்க பாடுபட்டவர். அதன் சேவையை விரிவுபடுத்தவும் நல்வழி காட்டினார்.

மூளாய் ஸ்ரீ கணேச சனசமூக நிலையத்தின் உப தலைவராகப் பலகாலம் சேவையாற்றி அதன் வளர்ச்சியில் பெரிதும் பாடுபட்டவர்.

அன்னார் 25.08.2006 வெள்ளிக்கிழமை காலை சிவபதமடைந்தார்.

---

## நவராத்திரிக்குரியவை

அம்பாளுக்குரிய விரதங்களுள் தலையாயது நவராத்திரி விரதம். நவராத்திரி விரதத்தின் போது வரும் ஒன்பது நாட்களின் ஒவ்வொரு இரவுக்கும் உரியதான மலர்கள் சொல்லப்பட்டது போன்று, வெவ்வேறு பச்சிலைகளும் கூறப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் எல்லா இரவுகளிலுமே வேப்பமிலையும் தவறாது இடம்பெறுமாறு பார்த்துக்கொள்ளப்படும்.

12ம் பக்கம் பார்க்க

---

உ

சிவமயம்

# இதமாகத் தூங்கு
# அப்பி அப்பா ரகுராமன்

சூரத்தமுவி அன்பான முத்தமிட்ட அப்பியே
உன் குழந்தை ரகுராமன் எழுதுகின்ற ஓலையிது
பாரதத்திற்கு அனுப்பி பொறியியலை போதித்து
பாங்கான வாழ்வைப் பரப்பி நின்ற பிதாவே
தூர இருந்ததனால் திசைமாறிச் சென்றிட்ட
துர்ரதிஸ்ட நாட்களை நினைத்தொருகால் மீழ்கின்றேன்
ஈரத்தை நெஞ்சில் என்றென்றும் வைத்தவரே
இதயத்தில் நிறைந்துள்ள என்னினிய அப்பியே !

கனவிலும் நனவிலும் எம்வாழ்வை நினைத்ததினால்
கடல் கடந்து உமைப்பார்க குடும்பத்தை அனுப்பிவைத்தேன்
இனங்கான முடியாத இன்பத்தைக் கண்டார்கள்
இன்னொருகால் வரும்போது இப்படியே இருக்க எண்ணி
இறைவனிடம் வேண்டிநின்ற எமக்கா இது பரிசு
தூய ஒளிகானத் தொடர்கின்றோம் வாரிசாய்
அன்றலர்ந்த முகத்தோனே அப்பியே என்பிதாவே
என் குடும்பம் பிள்ளைகளின் பார்வையினால் ஆறுதலடைகின்றேன்!

கல்விப் பயிருக்காய் கொடியால் நீரிறைத்த
காலத்தை நினைக்கக் கண்கள் கலங்குகிறது
அல்லல்படும் போது எழுதி வைத்த மடலெல்லாம்
அசைந்தசைந்து வந்திங்கே ஆறுதல் பேசிற்று
செல்லமாய் வளர்ந்திட்ட செழுஞ்சுடரே! அப்பியே!
சொல்வதற்கு மகனாக சொர்கத்தில் நானிருப்பேன்
இல்லை என்ற வார்த்தை உம்வாழ்வில் இல்லை அப்பி
இருக்கின்றேன் வாரிசாய் இதமாகத் தூங்கு அப்பி!

இங்ஙனம்,
ரகுராமன்.

உ
சிவமயம்

**ஆழ்கடலுக்கு அப்பால் ஐரோப்பிய நாட்டில் வாழ்கின்ற அன்பிற்குப் பாத்திரமான பேறாமகள்**

**றூபிகா கலங்குகிறாள்**

சொத்தோடு சுகம்தந்தீர் சோர்வறியா வாழ்வுதந்தீர்
முத்தோடு மணிகோர்த்து மாலைகட்டி நீரளித்தீர்
அத்தோடு அருகிருத்தி அன்பைப் பொழிந்து நல்ல
சத்தோடு சமைத்தகறி சோறெனக்கு ஊட்டிவிட்டீர்
இத்தோடு முடிந்ததோ அப்பியப்பா அப்பியப்பா
பத்தோடு பதினொன்றும் பயித்திடநான் துணை நின்றோ
கொத்தோடு இருந்த மலர் கொடிதவறி வீழ்ந்ததுபோல்
செத்தோடிப் போனீரோ சிவபிரானை அடைந்தீரோ!

**எங்கேயும் எப்போதும் எதிலேயும் அப்பி அப்பாவுக்கு தேவைப்பட்ட தயாளன்**

**பிதாவை எண்ணுகின்றார்.**

அப்பி அப்பா உங்களுக்கோர் வாகனமாய் நானிருந்தேன்
ஒப்பரிய ஆசிகளை அன்றோநீர் எனக்களித்தீர்
இப்பாரில் உமக்கேதும் இணையுண்டோ எண்ணுகின்றேன்
உப்பிட்டீர் உம்மைநான் உள்ளவும் மறப்பேனோ
தப்பேதும் செய்தாலும் தயாளன் நீ வாவென்று
கப்பிட்டுக் காலின் கீழ் கடுகடுக்க அடிக்காமல்
செப்பிடுவீர் அறிவுரைகள் ஒப்புயர்வு நான்பெறவே
அப்பி நீர் சென்றீரோ ஆண்டவனை அடைந்தீரோ !

உ
சிவமயம்

## சோடிப்புறாவிலொன்று பாடிப்பறந்ததால் வாடிக்கிடக்கின்ற ஆச்சரக்காள் !

கூடிப் பிறந்தவனே குலதெய்வம் ஆனவனே
ஆடி ஓடி என் அண்ணனென வாழ்ந்தவனே
தேடியென் வீடுவந்து தேன்மழையைத் தான்பொழிந்து
வாடிக்கிடந்த என் வாழ்வுதனை வளர்த்தவனே
பாடிப் பஜனை செய்தாய் பகலிரவாய்ப் பக்திகொண்டாய்
ஓடிவருவான் வதிரன்புலோவான் என்று சொல்வாய்
நாடியுனை வந்தது யார் கூட்டியுனைப் போனது யார்
சோடிப்புறா விலொன்று பறந்ததுபோல் பறந்திட்டாய் !

## எங்கள் அப்பி

எங்கள் எல்லோர் இதயங்களிலும் நிறைந்திருந்த எங்கள் அன்புத் தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்த துக்கச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தோம். இவர் இறைசிந்தையும், நற்குணமும், எல்லோரிடத்தும் அன்பு கொண்ட உள்ளமும் உடையவராக இருந்தமையால் இறைவன் இவரை நோயில் துன்பப்படாது சுகமாக தன்னிடம் அழைத்துக் கொண்டார்.

எங்களுக்கு இவர் மாமா முறையாக இருந்தாலும் எங்கள் எல்லோராலும் 'அப்பி' என்று செல்லமாக அழைக்கப்பட்டார். அப்பி என்றால் அவரது வெண்ணிறமான ஆடையும், புன்னகை பூத்த முகமும் தான் எம் கண் முன் வரும் எப்போழுதும் 'வதிரன் புலோவான்', என்ற பிள்ளையாரது நாமம் உச்சரித்தபடியே இருக்கும்.

எங்கள் சிறுபராயத்தில் எமது வீட்டில் நடக்கும் விடயங்கட்கு தமது காரில் வந்து செல்வார். எங்களையும் தமது காரில் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்று வருவார். பாடசாலை விடுமுறைக் காலங்களில் அழைத்துச் சென்று தம்முடன் மகிழ்ச்சியாக வைத்திருப்பார்.

எங்கள் தந்தையாரின் பெற்றோர் இறந்ததும், அவருக்கு கல்வி கற்பித்து, தகுந்த தொழிலில் அமர்த்தி திருமணமும் செய்து வைத்து சிறந்த வழி காட்டியதோடு நில்லாமல் அப்பா இறந்த பின் வீட்டிற்கு அடிக்கடி வந்து எம்மைப் பார்த்து ஆறுதல் கூறி புத்திமதிகளும் கூறி நல்வழியில் இட்டுச்சென்றார். அத்துடன் அப்பா செய்த வதிரன்புலோவான் 7ஆம் திருவிழாவை அப்பா இறந்த பின் முன்னின்று திறம்பட நடாத்தி எமக்கு வழிகாட்டினார்.

நாம் கொழும்பு வந்த பின்னரும் கடிதமூலம் சுகநலங்களை விசாரிப்பார். மூன்று மாதங்கட்கு முன்னரும் அம்மாவுடனும், எங்களுடனும் தொலைபேசி மூலம் உரையாடினார். அப்பொழுது ''தேவாவின் திருமணத்திற்கு வர விருப்பமாக உள்ளது வதிரன்புலோவான் வழிவிட்டால் வருவேன்" என்றார்.

ஆனால் இறைவனது சித்தம் வேறுவிதமாக அமைந்து விட்டது. எம்மை விட்டுப் பிரிந்தாலும் எம்மால் என்றும் மறக்க முடியாத அப்பி உங்களதும், அப்பாவினதும் விருப்பம் போலவே தொடர்ந்து வரதன்புலோவானின் 7ஆம் திருவிழாவைச் சிறப்பாகச் செய்வோம் என்று கூறி உங்கள் ஆத்மா சாந்திக்கும் பிரார்த்திக்கும்,

**40/29B 1/1, கல்யாணி றோட்,**
**பாமன்கடை,**
**கொழும்பு 06.**

**வாசகர் குடும்பம்,**
**(மாணிக்கவாசகர்)**

உ
சிவமயம்

# அண்ணாவை மறவாதிருக்க

*அம்பலத்துள் ஆடி நின்ற வாணா*
*அடியனுக்கு அத்திபாரமிட்ட தூணோ*
*எம்மினத்தின் வாழ்விற்கு ஏனோ*
*என்னிதயத்தில் இடம்பெற்ற தூணே*
*உம்முடைய இழப்பினால் யானும்*
*உருக்குலைந்து நிற்கின்றேன் எழுவீர் அண்ணா*
*அம்பலத்தின் வாணா அருமை மிகு அண்ணா*
*எப்பிறப்பில் காண்பேன் யான் உன் பிறப்பை அண்ணா*

*கல்விக்கும் தொழிலுக்கும் கரு அமைத்து தந்தாய்*
*கடமையின்றி வாழ்வதற்கும் களம் அமைத்துத் தந்தாய்*
*செல்வமுடன் வாழ்வதற்கும் சந்தர்ப்பம் தந்தாய்*
*சந்ததியைப் போற்றுதற்கும் சமவுயர்வு தந்தாய்*
*அல்லலுறும் போதுகளில் ஆறுதலும் தருவாய்*
*ஆர் எமக்கு வந்து ஈடு செய்ய உள்ளார்*
*கல்லறையில் இருக்கின்ற கடவுளிடம் கேட்பேன்*
*காலமுள்ள நாள் வரையும் அண்ணாவை மறவாதிருக்க*

**நடேசு**
(சு. நடராசா)
**M.L.T**

உ

சிவமயம்

சி. ஜெயானந்தசர்மா
பிள்ளையார் கோவில்
மூளாய்
சுழிபுரம்.

S. JEYANANTHASARMA
PILLAIAR KOVIL
MOOLAI
CHULIPURAM.

## மூத்த சொத்து ஒன்றை இழந்து நிற்கும் மூளாய் மண்

யாழ்ப்பாண மாநகரின் மேலைப் பகுதியாம் மூளாய் நல்லார் பலர் வதியும் நல்லூராகும். இவ்வூர் பாரறிந்த, பேரூர் மாத்திரமன்று, பல்வளமும், பாங்குறப் பெற்று, மிளிரும் ஓர் ஊராகும். இவ்வூரின் கண்ணே, முதுபெரும் குடும்பத்தில் சைவ மரபில் இற்றைக்கு எண்பது ஆண்டுகளுக்கு முன்பு கிடைத்தற்கு அரிய சிறப்பாகிய மானிடப் பிறவியிலே, மகத்தானதோர் குழந்தையாய் பிறந்து, மகிழ்வுறவே கற்பன யாவும் கற்கு, அருந்தமிழ் மொழியுடன் உலகளாவிய மொழியான ஆங்கிலத்தையும் சரிவரவே கற்று, மிளிர்ந்து வரும் நாளில், "உத்தியோகமே புருஷலட்சணம்" என்னும் கன்மொழிகொப்ப அரசகரும பீடத்தில், தொழிலாற்றும் வல்லமையை பெற்றார். செய்யும் தொழிலே தெய்வம் என்று அறிவுரைக்கமைய செய்கருமம் அனைத்தையும் கடமை கண்ணியம், கட்டுப்பாட்டுடன் இணைந்து சதா தெய்வீக சிந்தனையுடன் அனைவரையும் பேணி மதிப்பளித்து திறமையுடன் ஆற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படிப்பட்ட பெருமை சேர் பேராழன் வயது முதிர்ந்த இந்த வேளையிலும் தனியாத தாகமீது தளர்வுறாத சிந்தனையுடன் மூளாய் வதிரன்புலோ, வீநாயக, முருகனையும், பெருவிழாக் காலங்களில் மட்டுமன்றி, மாத, வார நாட்களிலும் மனதார வழிபட்டு மகிழ்வுடனே வாழ்ந்தார் என்பதை அறிந்தோர் அறிவர்.

இவர் இன்னமும் குறுகிய அளவு காலமாவது இவ்வையத்தில், வாழ தாம் கொடுத்து வைக்காத போதும், எல்லாம் வல்ல வீநாயக முருகனது பாதாரவிந்தத்தில், இணைந்துவிட்டார் என்பது உண்மை.

எனவே முதிய சொத்து ஒன்றை இழந்து தவிக்கும் மூளாய் வாசிகளில் நானும் ஒருவராக இருந்த போதும் இவரது ஆத்மா சாந்தியடைய வேண்டி வீநாயக, முருகனை பிரார்த்தித்து நிறைவுசெய்கின்றேன்.

ஓம்

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

---

5ம் பக்கத் தொடர்..

| | | |
|---|---|---|
| முதலாம் நாள் | - | வில்வத்தளம் |
| இரண்டாம் நாள் | - | துளசித்தாமம் |
| மூன்றாம் நாள் | - | மருவு இலை |
| நான்காம் நாள் | - | கதிர்ப்பச்சை இலை |
| ஐந்தாம் நாள் | - | விபூதிப்பச்சை இலை |
| ஆறாம் நாள் | - | சந்தன இலை |
| ஏழாம் நாள் | - | தும்மை இலை |
| எட்டாம் நாள் | - | பன்னீர் இலை |
| ஒன்பதாம் நாள் | - | மருக்கொழுந்து |

Kachcheri,

Amparai.

16th February 1972.

Dear Ambalavanar,

Thank you very much for your kind letter of 9th February. I am glad that you are happy there and that work particularly is easier to manage because of the possibility of working in English. I appreciate your loyal service very much indeed and will always remember your period of service with us.

With best wishes,

Yours sincerely,

(R.B.Weerakoon)
Government Agent,
Amparai District.

*Mr. V. Ampalavanar*
*Kachcheri,*
*Jaffna.*

සීමාසහිත උත්තර ලංකා බෞද්ධ සමිතිය
வரையறுக்கப்பட்ட வட இலங்கை பௌத்த சங்கம்
NORTH CEYLON BUDDHIST SOCIETY LTD.
[illegible] 9-431 - 1976-09-17 [illegible] 231 [illegible]
[illegible]
1974-2-15 [illegible] 99 [illegible]

දුරකතනය: / தொலைபேசி: / Telephone: 7214

Sri Naga Vihara
61, Stanley Rd.
Jaffna.

ஸ்ரீ நாக விஹார
61, ஸ்ரான்லி றோட்
யாழ்ப்பாணம்.

ශ්‍රී නාග විහාරය,
අංක 61, ස්ටැන්ලි පාර,
යාපනය.

Your No. ........ My No. ........ Date 1982.08.19

Mr. V. Ambalavanar who retired from the post of office Assistant to the Government Agent , Jaffna, is know to me very well. In addition to the post of Office Assistant, he was holding the post of Additional Assistant Collector of Customs, Jaffna District during his tenure of office Assistant. During this Period he discharged his duties diligently and loyally to the satisfaction of everybody. I am sure that he could be entrusted with any responsible job even now, in spite of his age.

I wish him all success.

S.M.J. Senaratna,
President, S.U.L.B.S &
Additional Landing Surveyor &
Asst. Collector of Customs,
Jaffna District.

உ
சிவமயம்

## மூளாய் ஊர் உதித்த மூத்த மைந்தன்
## சைவத்தமிழ் பேரறிஞன்,
## மறைந்தும் மறையாத மாண்புடையோன்

# அமரர். O. A. அம்பலவாணர் அவர்கள்

முந்தியெம் அன்னைபெற்ற
முதுபெரும் அறிவு வெள்ளம்
செந்தண்மை பூண்டொழுகும்
சீரிய கருணை உள்ளம்

மெத்தவோர் உயர் பதவி
மேதினி தன்னில் பெற்று
வித்தகன் என்ற பேரை
சுமந்ததோர் அறிவுப் பூங்கா

புத்தகசாலை போவோர்
புத்தியைத் தாங்கி யெங்கள்
முத்தங்கள் தோறும் வந்த
முழுமதியான தந்தை

வெண்ணிற ஆடைதாங்கி
வேதநெறி தளைத்து ஓங்க
பண்ணிசை பாடிப் பரமன்
புகழினைப் பேசும் அடியோன்

அழிகின்ற உடம்பு தன்னுள்
பழிபாவம் எதற்கு என்று
தெளிவோடு வாழ்ந்து காட்டி
விழியினைத் திறந்த தெய்வம்

அர்ச்சனைத் தட்டம் தாங்கி
ஆலயம் தன்னைத் தேடி
பொற்பதம் ஒன்றே போற்றும்
புனிதத்தின் பொறித்த சின்னம்

வதிரன்புலோவில் வாழும்
விநாயகன் தன்னை வேண்டி
விதியினை வென்று நின்ற
வேதத்தின் இனிய கானம்

என்றுமெஞ் சபையார் தன்னுள்
மணியாக ஒலித்து நின்ற
மனிதத்தின் மனிதமான
புனிதத்தில் பூத்த வாசம்

அம்பல வாணரென்னும்
நாமத்தை நாளும் சொல்வோம்
எம்பலம் ஓங்கும் தந்தை
ஆத்மாவும் சாந்தி கொள்ளும்!

**வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தானம் மூளாய்.**

**அமரர். அம்பலவாணர் ஐயா அவர்களின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும் பரிபாலன சபை.**

உ
சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்"

## அமரர். வைத்திலிங்கம் அம்பலவாணர் (O. A.) அவர்கள்

உயர்குடியில் பிறந்து தகுதியானதொரு பதவி வகித்தவர் அமரர் அவர்கள். வெள்ளைக்காரர் ஆட்சிக்காலத்தில் உயர் பதவியில் இருப்பது அத்தனை சுலபமான காரியம் அல்ல. ஆனால் அமரர் அவர்கள் மிகவும் உயர்ந்த பதவி வகித்தவர் என்று சொல்வதில் மிகையாகாது. ஆங்கில மொழியில் சிறந்த வல்லவராகஇருந்தாலும்கூட அவர் சைவத்தினையும், தமிழினையும் இரு கண்களாகக் கருதி தனது இறுதிமூச்சுவரை வாழ்ந்தவர். அமரர். அவர்கள் எனது தாய் மாமனார் அமரர். அருணாசலம் கந்தையாவின் மிக நெருங்கிய நண்பர் ஆவார். அவர்கள் வீட்டில்தான் எனக்கும் அமரர் அவர்கள் அறிமுகமாகியவர். நான் அவரை வாணர் மாமா என்று அழைப்பதுண்டு. எனது தாய்-மாமனார் வீட்டில்தான் இருவரும் தேவார திருவாசகத்தினை மணிக்கணக்காகப் பாடுவார்கள். கேட்பதற்கு மிக இனிமையாகவும், ரம்மியமாகவும் இருக்கும். என்னையும் அருகில் இருத்தி தேவாரங்களை பண்ணோடு பாட வைப்பார். இவ் இருவரின் தொடர்பால் எனக்கும் தேவாரங்கள் நன்கு ஓதிட வாய்ப்பு கிடைத்தது. எமது மடத்தடிப் பிள்ளையார் கோயில் உற்சவ காலத்தில் தவறாது கலந்து பண்ணோடு தேவார பாராயணங்களைப்பாடி எல்லோரையும் மெய்யுருகச் செய்வார். வாணர் மாமா இறுதிக்காலம் வரை சைவ போசனம் அருந்தியவர். என் செய்வது விதி வலிது. அது தனது கடமையினைச் செய்தது. வாணர் மாமா அவர்களின் ஆத்மா மடத்துப் பிள்ளையார் சுப்பிரமணிய சுவாமிகளின் பாதார விந்தங்களில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**ச. இராமலிங்கபிள்ளை**
தலைவர்
மடத்தடிப் பிள்ளையார்,
சுப்பிரமணியர் தேவஸ்தானம்.

சிவமயம்

## காலத்தால் அழியாத கலங்கரை விளக்கம்

அமரர். உயர்திரு. **O. A.** அம்பலவாணர் அவர்களைப்போல் ஒருவரை

## காலம் இனி எமக்குத் தருமோ

*கோயிலில் மணியுமாகி பள்ளியில் படிப்புமாகி*
*மனிதரில் புனிதராகி மாணிக்கம் வைரமாகி*
*தரணியில் வாழ்ந்த எங்கள் அம்பலவாண ரென்னும்*
*கனியினை இழந்தோம் காலமினியொன்று தருமோ இவர்போல்!*

*நெற்றியில் நீறுசாத்தி நெறியினில் உறுதிகாத்து*
*பள்ளியில் மாணவர்க்கு பக்கத்து துணையும் காத்து*
*தெள்ளிய சேவைசெய்த அம்பலவாண ரென்னும்*
*கண்ணியம் இழந்தோம் காலமினியொன்று தருமோ இவர்போல்!*

*உள்ளமும் வெள்ளையாகி உடையதும் வெள்ளையாகி*
*அள்ளியே சந்தணத்தால் அங்கத்தின் அழகுகாத்து*
*உள்ளொளி தந்து நின்ற அம்பலவாண ரென்னும்*
*தெள்ளிய நிலவிழந்தோம் காலமினியொன்று தருமோ இவர்போல்!*

*கிழக்கினில் உதித்து நாளும் மேற்கினில் மறைவான்போல*
*காலையில் கோவில் வந்து மாலையில் வீடு சேரும்*
*நினைக்கவே நெஞ்சம் நெகிழும் அம்பலவாண ரென்னும்*
*விளக்கினை இழந்தோம் காலமினியொன்று தருமோ இவர்போல்!*

*நித்தமும் கீழ்த்தெருவில் நீரது ஓடுதல்போல்*
*சித்தத்தைச் சிவன்பால் வைத்து சிவசிவ என்று சொல்லும்*
*பக்தியே வடிவாய்க் கொண்ட அம்பலவாண ரென்னும்*
*நதியினை இழந்தோம் காலமினியொன்று தருமோ இவர்போல்!*

**அமரர். அம்பலவாணர் ஐயா அவர்களது ஆத்மா சாந்தி பெறுவதாக!**

**வைப்பிரகாச வித்தியாலயம்**
மூளாய், சுளிபுரம்.

அமரர் அவர்களை நினைவுகூரும்
பழைய மாணவர் சங்கம்.

உ

சிவமயம்

மூளாய் ஊர்வாழ்ந்த முத்த தமிழ் அறிஞரும்
முன்னாள் யாழ். செயலக நிர்வாக உத்தியோகத்தருமான

## அமரர். O. A. அம்பலவாணர் அவர்களை

## நினைவு கூர்வோமாக!

பண்பினால் உயர்ந்து நின்றார் பாசத்தால் உலகையாண்டார்
அன்பினைப் பொழிந்து இந்த அவனியில் வாழ்ந்து வந்தார்
விண்ணவர் வியந்து போற்றும் அம்பலவாணர் ஐயா
மண்பணி முடித்தாரென்றோ மனத்தினுள் நினைவுகூர்வோம்!

அரசாங்க சேவை செய்தார் அரும்பணி ஆற்றி நின்றார்
தரமேதும் பாற்காதிந்த தரணிக்காய் வாழ்வையீந்தார்
வரமென மூளாய் பெற்ற அம்பலவாணர் ஐயா
சிரமது சாய்ந்தாரென்றோ மனத்தினுள் நினைவுகூர்வோம்

சைவமும் தமிழும் காத்தார் சபைகளில் நிமிர்ந்து நின்றார்
வையகம் முற்றும்வாழ வகையெல்லாம் செய்து வைத்தார்
தெய்வமாய் நாங்கள் போற்றும் அம்பலவாணர் ஐயா
மெய்யது விட்டாரென்றோ மனத்தினுள் நினைவுகூர்வோம்

மூளாயூர் மண்ணுதித்தார் மூத்தோனாய் வாழ்ந்துவந்தார்
நாளெல்லாம் வதிரன்புலோவான் நாமத்தைச் சொல்லிநின்றார்
ஏழைகள் வாழ வாழ்ந்த அம்பலவாணர் ஐயா
வாழ்வதை முடித்தாரென்றோ மனத்தினுள் நினைவுகூர்வோம்

வெண்மையை விரும்பிநின்றார் வேறேதும் வேண்டாமென்றார்
உண்மையைப் பேசுகின்ற உயரிய பண்பு கொண்டார்
கண்ணெலாம் நிறைந்துநின்ற அம்பலவாணர் ஐயா
என்றுமெம் இதயந்தன்னுள் வாழுவார் நினைவுகூர்வோம்

**அமரர். அம்பலவாணர் ஐயா அவர்களது ஆத்மா சாந்தி பெறுவதாக!**

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி**

**சித்திவிநாயகர் வர்த்தகநிலையம்**
பிள்ளையார் கோவிலடி,
மூளாய்.

அமரர் அம்பலவாணர் ஐயா
அவர்களை நினைவுகூரும்
க. பாலச்சந்திரன்

உ
சிவமயம்


*Moolai East Co-operative Credit Society*

**மூளாய் கிழக்கு ஐக்கிய நாணய சங்கம்**

Registered No: 494
Date : 13-10-1928

பதிவு இல: 494
திகதி : 13-10-1928

Your Referance No :
Our Referance No:

உமது தொடர்பு எண்:
எமது தொடர்பு எண்:

Moolai,
Chulipuram,
Sri Lanka.

மூளாய்,
சுழிபுரம்,
இலங்கை.


16 . 09 . 2006

## ஆத்ம ஜோதி அம்பலவாணர் மலர் உதிர்ந்தது

ஈழவள நாட்டில் செந்தமிழும் சைவமும் இசையும் செழித்து வளரும் யாழ். குடா பெரு மாநிலத்தில் வலிகாமம் மேற்குப் பகுதியில் மருதமும், நெய்தலும் அருகிருப்ப நீர்வளமும் நில வளமும் சீர் செறிந்த மூளாய் என்னும் புண்ணிய பூமியில் பிரபு விஜயேந்திர முதலியார் பரம்பரையில் வந்துதித்த அருணாசலம் அம்பலவாணர் அவர்களின் மறைவு எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டது.

அன்புக்கோர் அணிகலமாய், பண்பின் பிறப்பிடமாய் கடமையின் கண்ணியமாய் நேர்மையின் சிகரமாய் நல்ல அறிவாளனாய் நல் வழிகாட்டியாய் பரந்த நெற்றியில் எப்பொழுதும் திருநீறு திகழ தீர்க்கமான கண்களுடன் பொக்கை வாய் சிரிப்புடனும், எல்லோருடனும் அன்புடன் பழகும் நற்குண செம்மல் "ஆத்ம ஜோதி" அம்பலவாணர் உயர்ந்து நின்றார்.

அரச நிர்வாகத்தில் பற்பல திணைக்களங்களில் தமிழர் எவருக்கும் கிட்டாத அதிஉயர் பதவிகளை வகித்து அரச சேவைக்கும், எம் சமுதாயத்திற்கும் கலங்கரை விளக்காய் திகழ்ந்தவர். செம்மல் "ஆத்மஜோதி" அம்பலவாணர்.

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலயத்திற்கு ஓர் பரிபாலன சபை உருவாக வேண்டும் என்று அரும்பாடுபட்டவர். அது மாத்திரம் அல்லாமல் இவ்வாலயத்திற்கு பற்பல சேவைகள் செய்து ஆலய வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து, அச்சபையில் பலகாலம் சேவை செய்து சமுதாயத்தில், அமைதியும் ஒழுக்கமும், நிலவவேண்டும் என்றும் இறை நம்பிக்கை மூலம் அவற்றை வளர்தெடுக்கப் பாடுபட்டவர். ஆலய மேம்பாடு கருதி தனது சொந்த ''பிட்டி'' என்னும் 10 பரப்பு வயல் காணியை ஆண்டவனுக்கு நன்கொடை கொடுத்த நன்கொடையாளராவார். எந்நேரமும் நாவால் ''வதிரன் புலோவனே வதிரன் புலோவனே'' என்று உச்சரித்தபடி இருக்கும் ''ஆத்மஜோதி'' ஆவார்.

இக்கிராமத்தின் மக்களுக்கு பொருளாதார விருட்சமாக விளங்கும் "மூளாய் கிழக்கு ஐக்கிய நாணய சங்கத்தில்'' தலைவராக பலகாலம் சேவையாற்றி அதன் வளர்ச்சிக்கும், மேன்மைக்கும் பாடுபட்டு அச்சங்கம் தனித்துவமாக விளங்க காணிவாங்கி கட்டிடம் கட்ட பாடுபட்ட பெரியார் ஆவார்.

அன்னாரின் மறைவு எமக்கு ஓர் பேரிழப்பாகும். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம்

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**க. செல்வராசா,**
**செயலாளர்,**
**மூளாய் கிழக்கு ஐக்கிய நாணய சங்கம்.**

உ
சிவமயம்



# பிள்ளையார் பாடல்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் எம்மைக் காக்கும் பிள்ளையார்
ஆற்றங்கரை மீதிலே அரசமர நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
ஆனைமுகம் கொண்டவர் ஐந்து கரங்கள் உடையவர்
பானைவயிறு படைத்தவர் பக்தர் குறை தீர்ப்பவர்
அவல் கடலை சுண்டலும் அரிசிக் கொழுக்கட்டையும்
கவலையின்றித் தின்னுவார் கண்ணை மூடித்தூங்குவார்
கல்லினாலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
ஓம் நமசிவாய சிவாய நம ஓம்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
ஆறுமுக வேலனுக்கு அண்ணனான பிள்ளையார்
நேருந் துன்பம் யாவையும் நீக்கி வைக்கும் பிள்ளையார்
கலியுகத்தில் எம்மையே காக்க வேண்டி நேரினும்
எலியின் மீது ஏறியே இஷ்டம் போல சுற்றுவார்
பாடிப்புகழும் பக்தரின் பாவம் தீர்க்கும் பிள்ளையார்
கூடிப்பாடுந் தொண்டரின் குறைகள் தீர்க்கும் பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் வதிரன்புலோ பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் மூளாய்ப் பிள்ளையார்.

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

**ஆனை முகன் ஆறுமுகன்**
**அம்பிகை பொன்னம் பலவன்**
**ஞானகுரு வாணி பதம் நாடு**

## பஞ்சபுராணம்

### தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர் பானீக்கி
நுழை தரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரே

## திருவாசகம்

அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோரிடை யூறெனக் குண்டோ
எண் தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானே இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே ! உலப்பிலா வொன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருபல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாராயணனோடு நான் முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழார்கள்
திசை யனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.


## திருப்புகழ்

பாதி மதி நதி போது மணிசடை
நாதனருளிய - குமரேசா
பாகுகனி மொழி மாது குறமகள்
பாதம் வருடிய - மணவாளா
காது மொருவிழிகாக முறவருள்
மாயனரிதிரு - மருகோனே
காலனெனையணு காமலுனதிரு
காலில் வழிபட - அருள்வாயே
ஆதிய யனொடு தேவர் சுரலுற
காளும் வகையுறு - சிறைமீளா
ஆடு மயிலினி லேறிய மரர்கள்
சூழவலம் வரு - மிளையோனே
சூத மிக வளர் சோலை மருவு சுவாமி
மலைதனில் - உறைவோனே
சூரனுடலற வாரி சுவறிட
வேலை விடவல - பெருமாளே



# நன்றி நவிலல்

எனது அன்பு கணவர் இறைபதம் அடைந்த செய்திகேட்டு அவருடைய இறுதிக் கிரியையில் பங்கு பற்றியவர்களுக்கும் அதற்கு வேண்டிய ஒத்துழைப்பு நல்கியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவியோருக்கும் இன்று நடைபெற்ற கிரியைகளிலும் ஆன்ம சாந்திப்பிராத்தனையிலும் பங்குபற்றியோருக்கும் தொலைபேசி, தந்தி, தபால் மூலம் அனுதாபம் தெரிவித்த அன்பர்கள் அனைவருக்கும் எம் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**நன்றி**

**இங்ஙனம்,**
**மனைவி, பெறாமக்கள்**

கலைமகள் கொம்பியூட்டர் பிறின்ட், யாழ். பல்கலைக்கழகம் முன்பாக, திருநெல்வேலி.

# ACKNOWLEDGEMENT

**We thank all our relations friends and well wishers who visited console and attended the funeral and sent messages of condolences and placed wreaths.**

**We regret our inability to thank you individually**

**We also thank to Kalaimagal Computer Printers, Thirunelvely for printing a book within a short time**

Mrs. Annaluxmy
Ampalavanar